வருகிறதா? அந்த அளவுக்கு அவையில் ஒரு கட்டுப்பாடு இருக்க வேண்டும். அதனால், எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் ஒரே நேரத்தில் எழுந்து நிற்பது என்ற போக்கை வருங்காலத்தில் தயவு செய்து நீங்கள் கைவிட வேண்டும். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

8. அரசினர் தீர்மானங்கள்

(அ) உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்களைப் பேரவைப் பணிகளினின்று கூட்டத் தொடரின் எஞ்சிய நாட்களுக்கு நீக்கி வைத்தல்

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"பேரவையின் அலுவல்களை நடைபெற விடாமல் இடைமறித்தும், பேரவையின் விதிகளுக்கு மாறாக அவையில் குந்தகம் செய்து வருவதாலும், சட்டமன்றப் பேரவை விதி 121, உட்பிரிவு (2)-ன்கீழ் இன்று அவைக்கு வருகை தந்திருக்கும் திரு. எல். வெங்கடேசன் அவர்களை இக்கூட்டத் தொடர் முடிய பேரவைப் பணிகளினின்று தற்காலிக நீக்கம் செய்ய வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

திரு. எல். வெங்கடேசன் அவர்கள், இந்தக் கூட்டத் தொடர் முடிகின்ற வரையுள்ள எஞ்சிய நாட்களுக்கு பேரவைப் பணிகளினின்று நீக்கப்படுகிறார்.

TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்